1979 மார்ச் 9] [பேரவைத்தலைவர்]

பத்திரிக்கைகளில் இருந்து பதில் எதிர்பார்த்து, பிறகு இந்த அவையில் உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் தந்து, பிறகு நான் தீர்ப்பளிக்கிறேன்.

*திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, இங்கே தரப் பட்டிருக்கின்ற உரிமைப் பிரச்னை குறிப்பிட்ட இரண்டு மூன்று பத்திரிகைகளைப்பற்றியது அதாவது முரசொலி, அலை ஓசை, தினகரன் ஆகிய ஏடுகளில் இங்கு எழுப்பப்பட்ட சிம்கோ மீட்டர்ஸ் தொடர்பான முழக்கங்கள் வெளி வந்துவிட்டன என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலே தரப்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்கள், அன்றைய தினம் முழக்கங்களுக்கிடையே பேசியது தெளிவாகக் காதுகளில் விழவில்லை என்ற குறிப்பினை முரசொலி, அலை ஓசை, தினகரன் ஆகிய பத்திரிகைகளிலே மாத்திரமல்லாமல் தினமணி ஏடு கூட அந்தச் செய்தியை வெளியிடுகிற நேரத்தில் அதனுடைய இறுதிக் குறிப்பிலே துணைத்தலைவர் என்ன சொன்னார் என்பது காதிலே விழவில்லை என்று கோடிட்டு காட்டியிருக்கிறது.

அது மாத்திரமல்லாமல், அன்றைக்குப் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் என்ன சொன்னார் கள் என்பது கூட குழப்பத்திற்கிடையே யாருடைய காதிலும் விழவில்லை என்கிற அந்தக் குறிப்பும் இந்து, இன்டியன் எக்ஸ் பிரஸ் ஆகிய ஏடுகளில் கூட வெளியிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல வெளியே மாண்புமிகு துணைத்தலைவரவர்கள் சில பத்திரிகை நிருபர்களை அழைத்துப் பேசியதைக் கண்டேன். குறிப்பிட்ட சில பத்திரிகைகளுக்கு விளக்கம் அளித்துக்கொண் டிருந்தார். அவர்கள் எல்லா பத்திரிகை நிருபர்களையும் தன்னுடைய அறையிலே அழைத்து வைத்து இப்படி இப்படி நான் தீர்ப்புக் கூறினேன் என்று சொல்லியிருந்தால் அதற்கேற்ப பத்திரிகைகளிலே பிரசுரித்திருக்கக்கூடும். இதனை அரசாங்க செய்தித்துறை, இயக்குனர் அவர்களாவது செய்திருக்கலாம். எல்லா பத்திரிகை நிருபர்களையும் உடனடியாக அழைத்துச் சொல்லியிருக்கலாம். ஏனென்றால் செய்தித்துறை ரொம்ப வேகமாகவும் விறுவிறுப்பாகவும் செயல்படுகிறது. அது எப்படி என்பதை விளக்குகிறேன்.

நான் சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு மனு செய் திருந்தேன். அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்ட விஷயத்தை அதாவது எனக்குப் பாதகமாக முடிந்துவிட்ட விஷயத்தை உடனடியாக செய்தித்துறை இயக்குநர் அவர்கள் எல்லா பத்திரிகைக்காரர்களையும் அழைத்து, அதிலும் அலை ஓசை போன்ற பத்திரிகைகளைத் தவிர மற்ற பத்திரிகைக்காரர் களை அழைத்து கருணாநிதி போட்ட கேஸ் தள்ளுபடி செய்யப் பட்டது என்ற செய்தியை மிக விரைவாக வெளியிட ஏற்பாடு செய்தார்கள். அதாவது திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் எமர்ஜென்சி காலத்திலே எப்படி செய்திகளை விரை வாகவும், விறுவிறுப்பாகவும் தந்து கொண்டிருந்தார்களோ

[திரு. மு. கருணாநிதி] [1979 மார்ச் 9

அதுபோன்று இந்த அரசின் செய்தித் துறை செயல்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட செய்தித் துறை அன்றையதினம் எல்லா நிருபர்களையும் அழைத்து மாண்புமிகு பேரவைத் துணைத்தலைரவர்கள் இதைத்தான் சொன்னார்கள். எனவே நீங்கள் இவற்றை வெளியிடக்கூடாது என்று குறிப்பிட்டிருக்கலாம். அல்லது மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரவர்களாவது தன்னுடைய அறையிலே எல்லா பத்திரிகை நிருபர்களையும் அழைத்து நான் இப்படித்தான் சொன்னேன். அது உங்களுடைய காதுகளிலே விழாமல் போயிருக்கக் கூடும், ஆகவே என்னுடைய ஆணை இதுதான், எனவே இதனைப் பிரசுரிக்காதீர்கள் என்று சொல்லி இருக்கலாம். அது மாத்திரமல்ல, இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அன்றையதினம் எழுப்பப்பட்ட முழக்கங்களுக்கு மேலாகவே மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரைப்பற்றி, * * * என்று திருச்சியில் தொழிலாளர்கள் குறிப்பிட்டதாக இந்த அவையிலே மாண்புமிகு அவை முன்னவர்கள் எடுத்துச் சொன்னார்கள், அவ்வாறு அவர்கள் எடுத்துச் சொன்னது நேற்றைய தினம் பத்திரிகைகளிலே வெளி வந்திருக்கிறது. அது உரிமைப்பிரச்னையாகாதா? ஆகவே அதனையே உரிமைப்பிரச்னையாக எடுத்துக்கொள்ளாத நிலையில், மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரவர்கள் சொன்னது யாருடைய காதிலேயும் சரியாக விழாத காரணத்தால் இவ்வாறு பிரசுரிக்கப்பட்டிருப்பது உரிமைப்பிரச்னை என்று சொல்வது சரியல்ல என்பதுதான் என்னுடைய கருத்து.

<u>திரு எஸ். திருநாவுக்கரசு:</u> ஒரு தன்னிலை விளக்கம். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அன்றையதினம் சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகள் நடந்தபோது சபையிலே ஒழிக என்று பலவகையான கோஷங்கள் எழுப்பப்பட்டன. அப்போது நான் தீர்ப்புச் சொல்லுகின்ற நேரத்திலே கோஷங்கள் எழுப்பப்பட்டன என்பது இருக்கலாம், ஆனால் என்னென்ன கோஷங்கள் எழுப்பப்பட்டன என்பது எல்லாம் பத்திரிகைக் குறிப்பிலேயும் சபைக்குறிப்பிலேயும் இருந்து நீக்கப்பட வேண்டும் என்றுதான் உத்தரவிட்டேன். அப்படி சொன்னது மாத்திரமல்ல. வெளியிலே பத்திரிகை நிருபர்கள் என்னிடம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு திரு. மாரிமுத்து அவர்கள் என்ன சொன்னார்கள் என்று கேட்டார்கள். நான் அப்போது அதுபற்றிச் சொல்லிய பிறகு, அவர்கள் சொன்னது உங்கள் காதுகளிலே எப்படி விழுந்ததோ அப்படிப் பிரசுரிக்கலாம் என்று சொல்லிவிட்டு, அதன்பிறகு என்னுடைய தீர்ப்பினை உறுதிப்படுத்துகின்ற அளவிலே அங்கே எழுப்பப்பட்ட முழக்கங்கள் என்ன என்பதைப் பிரசுரிக்கக் கூடாது என்பதை. வலியுறுத்தினேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.